பிற்பகல் 12–15

7. அறிவிப்புகள்

(அ) கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:*

"In pursuance of Clause (2) of Article 206, read with Clause (3) of Article 203 of the Constitution of India, I, Dr. K. Rosaiah, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the further demands for grants in advance during the Financial Year 2015–2016."

8. கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள், 2015–2016, வாக்கெடுப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2015–2016 ஆம் ஆண்டின் செலவிற்கான கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு. மாண்புமிகு நிதி மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2015–2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் முன்பண மானியக் கோரிக்கைகள் அடங்கிய 25–8–2015 ஆம் தேதியிடப்பெற்ற அறிவிப்பில் இடம்பெற்றுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள், 2015–2016 ஆம் ஆண்டிற்கான கூடுதல் செலவினங்களுக்காக அரசுக்கு முன்பணமாக வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.